# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**ஏற்றுமதியாளர்கள், நேரடியல்லாத ஏற்றுமதியாளர்கள், பெ.சே.வ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இன் (ஊ) பந்தியின் (ii) ஆம் உபபந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விஷேட கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட ஆட்கள், பெ.சே.வ சட்டத்தின் 22(7) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஆள் மற்றும் மேலே குறிப்பிட்ட எவரேனும் ஆளுக்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் எவரேனும் ஆட்களுக்கான அறிவித்தல்**

## இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரி திட்டம்

**2011 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தற்பொழுது புடவை கோட்டாச் சபை (TQB) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) என்பவற்றினால் கண்காணிக்கப்பட்டு வரும் இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரி திட்டம் 2011 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து திருத்தப்பட்ட திட்டமொன்றின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் மூலம் நிர்வகிக்கப்படும்.**

பின்வரும் வகுதியினைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட ஆட்கள் இந்த புதிய திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகைமை பெறுவர்.

(i) ஏற்றுமதியாளர்கள்
(ii) நேரடியல்லாத ஏற்றுமதியாளர்கள்
(iii) பெ.சே.வ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இன் (ஊ) பந்தியின் (ii) ஆம் உபபந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விஷேட கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட ஆட்கள்.
(iv) பெ.சே.வரிச் சட்டத்தின் 22(9) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள்.
(v) மேலே குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆளுக்கான பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் எவரேனும் ஆள்.

**இதற்கமைவாக இந்த வகுதியில் ஏதேனும் ஒன்றுக்குள்வரும் பதிவு செய்யப்பட்ட ஆள் எவரும் இந்த திட்டத்தின் கீழ் சேர்ந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2011 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் வரி செலுத்துநர்களை பதிவு செய்வதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் கீழ் மாடியில் செய்யப்பட்டது.**

ஏற்கனவே புடவை கோட்டாச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றுடன் பதிவு செய்துள்ளவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அத்தகைய வரி செலுத்துநர்கள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவர் என்பதுடன் அவற்றுக்கான இலக்கங்கள் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட பெ.செ.வ பிரிவு, பெ.சே.வ மீள்கொடுப்பனவு பிரிவு மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பெ.சே.வரி பிரிவு | - | தொலைபேசி | - | 011-2338521, 011-2328709, 011-2338956 |
| | | | - | 011-2338718, 011-2338925 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | - | தொலைபேசி | - | 011-2328702, 011-3009093, 011-3009257 |
| செயலகக் கிளை | - | தொலைபேசி | - | 011-2338635, 011-2338570 |

உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.inlandrevenue.gov.lk

## உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக